### கடலூர், மயிலாடுதுறை மாவட்டங்களில்

# தலைவர்களின் 6 திருவுருவச் சிலைகள்!

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!

கடலூர், ஜூலை 17-

கடலூர் மற்றும் மயிலாடுதுறை மாவட்டங்களில் நடைபெற்ற பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொண்ட தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (15.7.2025) கடலூர் மாவட்டம், சிதம்பரம் வட்டம், லால்புரத்தில் ஐயா எல். இளையபெருமாள் அவர்களின் திருவுருவச் சிலையையும், சிதம்பரத்திலுள்ள பேட்டை, அம்பேத்கர் நகரில் புதுப்பிக்கப்பட்ட புரட்சியாளர் அம்பேத்கர் அவர்களின் திருவுருவச் சிலையையும், மயிலாடுதுறை மாவட்டம், செம்பிருப்பு கடைவீதி பகுதி, கொள்ளிடம் புறவழிச்சாலை மற்றும் மயிலாடுதுறை மாவட்ட கழக தலைமை அலுவலகத்தின் புதுப்பிக்கப் பட்ட அண்ணா பகுத்தறிவு மன்றம் ஆகிய மூன்று இடங்களில் புதிதாக நிறுவப்பட்டுள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலைகளையும் திறந்து வைத்தார்.

அதன் தொடர்ச்சியாக நேற்று (16.7.2025) மயிலாடுதுறை மாவட்டம், வழுவூர் முகப்பு சாலையில் கழகத்தின் சார்பில் நிறுவப்பட்டுள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலையை முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

கடலூர் மற்றும் மயிலாடுதுறை மாவட்டங்களில்மேற்கொண்டசுற்றுப்பயணத்தின் போது, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நான்கு திருவுருவச் சிலைகள், புரட்சியாளர் அம்பேத்கர் மற்றும் ஐயா எல். இளையபெருமாள் ஆகியோரின் திருவுருவச் சிலைகள் திறந்து வைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

### அண்ணா, கலைஞர், தளபதி வழியில் கண்ணியம் காத்து

# பெருந்தலைவர் காமராஜர் மீது பெருமதிப்பு கொண்டவன் நான்!

## துணைப் பொதுச் செயலாளர் திருச்சி சிவா எம்.பி., அறிக்கை!

சென்னை, ஜூலை.17-

அண்ணா, கலைஞர், தளபதி வழியில் கண்ணியம் காக்கும் கடமை கொண்ட கழகத் தொண்டனான நான், பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் மீது மிகுந்த மரியாதையும், பெருமதிப்பும் கொண்டுள்ளேன் என்று கழகத் துணைப் பொதுச் செயலாளர் திருச்சி சிவா எம்.பி. தெரிவித்துள்ளார்.



இதுதொடர்பாக கழகத் துணைப் பொதுச் செயலாளர் திருச்சி சிவா எம்.பி. அறிக்கை வருமாறு :-

பெருந்தலைவர் காமராசரின் புகழுக்குக் களங்கம் விளைவிக்கும் தன்மையில் நான் பேசியதாகக் கருத்து கொண்டு விவாதங்கள் வலுத்துக் கொண்டு வருகின்றன. நான் எதிர்வரிசையில் இருக்கும் தலைவர்களைப் பற்றிப் பேசும் போதுகூட கண்ணியத்தோடு விமர்சிப்பதைப் பலரும் அறிவார்கள்.

கல்விக்கண் திறந்த காமராசர் என்றும், மதிய உணவுத் திட்டத்தின் மூலமாக ஏழை வீட்டுப் பிள்ளைகள் கல்வி கற்க பள்ளிக்கூடம் வருவதற்கு இந்தியாவிற்கே வழிகாட்டியாகத் திகழ்ந்தவர் என்பதையும் பல மேடைகளில் உருக்கமாகவும், உணர்ச்சிகரமாகவும் நான் பேசுவது வழக்கம்.

“குணாளா! மணாளா! குலக்கொழுந்தே! குடியாத்தம் சென்று வா! வென்று வா!” என்று எழுதிய பேரறிஞர் அண்ணா காமராசரின் மறைவுக்குப் பின் அவருக்கு அனைத்து மரியாதைகளும் செய்ததோடு, சென்னை விமான நிலையத்தின் உள்நாட்டு முனையத்திற்கு அவர் திருப்பெயரைச் சூட்டிய முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரின் வழியொற்றி, அவர் பிறந்த நாளை “கல்வி வளர்ச்சி நாளாக” கடைப்பிடித்து அவரின் புகழுக்கு நாளும் மெருகேற்றும் இன்றைய கழகத் தலைவர் முதலமைச்சர் தளபதி அண்ணன் மு.க. ஸ்டாலின் தலைமையின் கீழ் பணியாற்றும் நான், மறைந்த தலைவர்களின் புகழுக்கு மாசு படிவதை எந்த வகையிலும் யார் செய்தாலும் ஏற்கும் மனநிலை கொண்டவனல்ல.

நாட்டு விடுதலைப் போரில் பல ஆண்டுகள் சிறையேகி, தியாகத் தழும்பேறி, முதலமைச்சராகவும், அகில இந்தியக் காங்கிரஸ் கட்சித் தலைவராகவும் மக்கள் தொண்டாற்றி, எல்லோர் மனதிலும் தனித்த இடம் பிடித்த பெருந்தலைவர் காமராசர் அவர்கள் மீது மிகுந்த மரியாதையும் பெருமதிப்பும் கொண்டவன் நான்.

அண்ணா, கலைஞர், தளபதி வழியில் கண்ணியம் காக்கும் கடமை கொண்ட கழகத் தொண்டன்!

இந்த விளக்கத்தினை எல்லோரும் அன்புகூர்ந்து ஏற்று என் உரையில் நான் கூறிய செய்தியினை மேலும் விவாதப் பொருளாக்கிட வேண்டாம் என அனைவரையும் அன்புடன் வேண்டிக் கொள்கிறேன்!

இவ்வாறு அவர் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.



நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு நேற்று (16.07.2025)திருச்சிராப்பள்ளி பஞ்சப்பூர் ஒருங்கிணைந்த பேருந்து முனையத்தை பயணிகள் பயன்படுத்தும் வகையில் அனைத்து பணிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளதைத் தொடர்ந்து நகர் மற்றும் புறநகர் பேருந்துகள் சேவைகளை கொடியசைத்து தொடங்கி வைத்து பேருந்து முனையத்தின் செயல்பாடுகளை பார்வையிட்டார். இந்நிகழ்வில், மாவட்ட ஆட்சித்தலைவர் வே.சரவணன், மாநகர காவல் ஆணையர் திருமதி.காமினி, மாநகராட்சி மேயர் மு.அன்பழகன், மாநகராட்சி ஆணையர் லி.மதுபாலன்,உதவி ஆட்சியர் (பயிற்சி) செல்வி.தீபிசானு,துறையூர் சட்டமன்ற உறுப்பினர் செ.ஸ்டாலின் குமார், தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம் கும்பகோணம் கோட்டத்தின் நிர்வாக இயக்குநர் க.தசரதன், மண்டல பொதுமேலாளர்கள் சிங்காரவேலன், சதீஷ்குமார், மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.ர.ராஜலட்சுமி, மண்டலத்தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள், மாநகராட்சி அலுவலர்கள், போக்குவரத்துத்துறை அலுவலர்கள், பொதுமக்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு நேற்று முன்தினம் (15.07.2025) திருவண்ணாமலை வட்டம், பழையனூர் ஊராட்சியில் ”உங்களுடன் ஸ்டாலின் திட்டத்தினை தொடங்கி வைத்து பல்வேறு துறைகளின் சார்பாக பயனாளிகளுக்கும் நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள். இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு சட்டப்பேரவை துணைத்தலைவர் கு.பிச்சாண்டி, மாவட்ட ஆட்சித்தலைவர் க.தர்ப்பகராஜ், திருவண்ணாமலை நாடாளுமன்ற உறுப்பினர் சி.என். அண்ணாதுரை மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.


